# அருள்மிகு திருவல்லீஸ்வரர் திருக்கோயில்




வெ. இராமமூர்த்தி

சிவனருளும், குருவருளும், திருவருளும் பொழியும் திருவலிதாயத் திருக்கோயில், சீர்மிகு சென்னையில் உள்ள தொண்டை நாட்டு பாடல் பெற்ற தலங்கள் முப்பத்திரண்டில் இருபத்தியொன்றாம் திருத்தலமாகும். சுமார் 1200 ஆண்டுகள் பழமையான தலம். சென்னையைச் சுற்றியுள்ள திருஒற்றியூர், திருமயிலை ஆகிய திருத்தலங்கள் பூமாலை போல் அமையப்பெற்ற பதினொன்று திருத்தலங்களின் நடுவே மையமாக அமைந்துள்ளது இத்திருத்தலம். இன்று இப்பகுதி பாடி என்றழைக்கப்படுகிறது. மன்னர்களின் போர் வீரர்கள் தங்கும் இடம் படை வீடு எனப்படும். ஆங்கு கொற்றவை, துர்க்கை போன்ற எல்லையைக் காக்கும் தெய்வங்களைப் போர் வீரர்கள் வழிபடுவர். அவ்வாறு அவர்கள் வழிபட்ட 'படவேட்டம்மன்' என்ற கோயிலுக்குத் தெற்கில் அமைந்துள்ளது இத்தலம்.

திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர், வள்ளலார், பாம்பன் சுவாமிகள் மற்றும் பல்வேறு சித்தர்களும் ஞானிகளும் வழிபட்டுப் போற்றிப் பாடியதால், இப்பகுதி பரமனைப் பாடிய நல்லூர் என்றழைக்கப்பட்டு நாளடைவில் பாடியாக மருவியது என்பர்.

**ஆலய அமைப்பு:**

இறைவன்: திருவல்லீஸ்வரர்

இறைவி: ஜெகதாம்பிகை என்ற தாயம்மை

தீர்த்தம்: பரத்வாஜ தீர்த்தம், அனுமன் தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம்

தலமரம்: சரக்கொன்றை, பாதிரி

கிழக்கு நோக்கியுள்ள இத்திருக்கோயில் ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் மூன்று நிலை இராச கோபுரங்களுடன் ஓங்கி உயர்ந்து காணப்படுகிறது. ஐந்து கலசங்களுடன் பல எழில்மிகு வண்ணச் சிற்பங்கள் – சிவபெருமான் உமையம்மை திருமணம், விநாயகர், முருகர் திருவிளையாடல்கள் என அருள்புரியும் காட்சிகள் – பீடுடன் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றது. முதன்மை வாயிலைக் கடந்தால் கொடிமரம், பலி பீடம், நந்திபெம்பெருமான் அனைத்தும் ஆகம விதிகளுக்கேற்ப அமைந்துள்ளது. மகா மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை அடங்கிய மூலக்கோயில் ஒரு கற்றளியாகும். அங்குள்ள கல்தூண்களில் காணும் பல கவின்மிகு கலைச்சிற்பங்கள், அக்கால கட்டடக் கலைக்கோர் சான்றாகும். கருவறையில் உத்திராட்சப் பந்தலின் கீழ் லிங்க